**செய்தி வெளியீடு எண் : 084** **நாள் : 11.01.2024**

**செய்தி வெளியீடு**

இன்று 11.01.2024 சென்னை மாவட்டம் வேப்பேரியில் இயங்கி வரும் ஆதிதிராவிடர் நல கல்லூரி மாணவியர் விடுதியில் நடைபெற்ற நிகழ்வில் ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் திருமதி. என். கயல்விழி செல்வராஜ் அவர்கள் சென்னையில் இயங்கி வரும் 22 ஆதிதிராவிடர் நல கல்லூரி விடுதிகள் மற்றும் ஒரு பள்ளி விடுதி என மொத்தம் 23 விடுதிகளில் தங்கி கல்வி பயிலும் மாணாக்கருக்கு ஒருங்கிணைந்த சமையலறை மூலம் உணவு வழங்கும் திட்டத்தினை துவக்கி வைத்தார்கள்.

மேலும், சென்னை மாவட்டம் நந்தனத்தில் அமைந்துள்ள எம்.சி.ராஜா கல்லூரி மாணவர் விடுதியில் மரக்கன்றுகளை நட்டு வைத்து ஒருங்கிணைந்த சமையலறை மூலம் வழங்கப்பட்ட உணவினை மாணவர்களுடன் அமர்ந்து அருந்தினார்கள்.

இந்நிகழ்வில் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் அவர்களுடன் தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் தலைவர் திரு.உ.மதிவாணன், எழும்பூர் தொகுதி சட்டமன்ற உறுப்பினர் திரு,பரந்தாமன். ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறை அரசு செயலாளர் திருமதி. க. லட்சுமி பிரியா இ.ஆ.ப., ஆதிதிராவிடர் நலத்துறை இயக்குநர் திரு. T. ஆனந்த் இ.ஆ.ப., தமிழ்நாடு ஆதிதிராவிடர் வீட்டு வசதி மற்றும் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திரு.க.சு.கந்தசாமி. இ.ஆ.ப., பழங்குடியினர் நலத்துறை இயக்குநர். திரு. அண்ணாதுரை ,மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

அரசு செயலாளர்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in